**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.80/2023**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை எ.ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பிரவீன் மனோகர் | த/பெ.: | மனோகரன் |
| கிராமம்: | மதுரை | தாலுக்கா: | மதுரை |
| மதம்: | இந்து | தொழில்: | சட்ட அலுவலர், ICICI Lambard Insurance, மதுரை. |
| வயது: | 38 | முகவரி: | மதுரை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.10.2025

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.2 | 27.09.2019 | 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக காவல் துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| எ.ம.சா.ஆ.3 | 03.12.2021 | சென்னை உயர்நீதிமன்றம் CMA No.3359/2021 in CMP.No.19274/2021–ல் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு | கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது |
| எ.ம.சா.ஆ.4 | 15.07.2025 | குளித்தலை, சார்பு நீதிமன்றத்தில் MCOP No.626/2019 வழக்கில் கடந்த 15.07.2025–ல் ஏற்பட்ட தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |

2, 3 எதிர்மனுதாரர்களை பொறுத்து இம்மனு தள்ளபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இந்த விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக நான் சம்பவ இடம் சென்று யாரேனும் விசாரணை செய்து வந்தேனா என்றால் நான் செய்யவில்லை. எனது அலுவலகத்தில் உள்ள விசாரணை குழுவைச் சேர்ந்த நபர்கள் விசாரணை மேற்கொண்டார்கள். விசாரணை குழுவில் உள்ள நபர்களை நான் சாட்சிகளாக யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள வழக்கின் முடிவு குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.3–ல் கண்ட வழக்கு சென்னை, உயர்நீதிமன்றத்தில் 2022–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3–ல் கண்ட வழக்கு சென்னை, உயர்நீதிமன்றத்தில் நாளது தேதி வரை இடைக்கால தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது குறித்தும், CMA வழக்கு நிலுவையில் இருந்து வருவது குறித்தும் எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எ.ம.சா.ஆ. 4 குளித்தலை, சார்பு நீதிமன்றம் இந்த விபத்து சம்பந்தமாக வழங்கிய தீர்ப்பின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். இதே விபத்தில் காயம் அடைந்த நபர்கள் பட்டுக்கோட்டை, கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் MCOP No.20/2021, MCOP No.21/2021 ஆகிய வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரைகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

பட்டுக்கோட்டை, மாவட்ட அமர்வு நீதிமன்றம் மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரரும், 3ம் எதிர்மனுதாரரும் சரிசமமாக மனுதாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க வேண்டுமென தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். பட்டுக்கோட்டை, அமர்வு நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பின் மீது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறித்து எந்த ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் அரசுப்போக்குவரத்துக்கழக ஓட்டுநர் சரியாக வாகனத்தை இயக்கிய போது 2ம் எதிர்மனுதாரர் லாரி ஓட்டுநர் எந்த வித எச்சரிக்கை விளக்கும் எரிய விடாமல் ரோட்டில் நிறுத்தி இருந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரருக்காக, 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

<u>**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**</u>

இந்த விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை, குற்றப்பத்திரிக்கை 1ம் எதிர்மனுதாரர் பெயரில் தான் போடப்பட்டுள்ளது என சாட்சியம் அளிக்கிறார். 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரை சாட்சியாக இந்த வழக்கில் விசாரித்துள்ளோமா என்றால் இல்லை. 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் லாரியை ரோட்டில் ஓரமாக நிறுத்தாமல் ரோட்டில் நிறுத்தி எந்த விதமாக சமிக்கை விளக்கை எரிய விடாமலும், எச்சரிக்கை பலகை ஏதும் வைக்காமல் நிறுத்தியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடம் 4 வழி சாலையா என்றால் அரியலூர் மாவட்டம், ஜெயம்கொண்டம்

தாலுக்கா, தா.பலுார் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காரைக்குறிச்சி ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு சாலையில் விபத்து ஏற்பட்டது. 2ம் எதிர்மனுதாரருடைய வாகன ஓட்டுநர் ரோட்டிலேயே வாகனத்தை நிறுத்தியதாலும், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு, 3ம் எதிர்மனுதாரரான எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் எந்த விதமான பொறுப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.